# ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையில் சிறப்பாக நடைபெற்ற வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடல்








வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 18வது வருடாந்த ஒன்று கூடல் கடந்த ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை Scarborough Milliken Park இல் முன்னொருபோதும் இல்லாதவகையில் பெருந்தொகையான மக்களுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமது கல்லூரித் தாயை நினைவுகூருமுகமாகக் கல்லூரியின் பழைய மாணவர்களும் முன்னாள் ஆசிரியர்களும் நலன்விரும்பிகளும் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் மிகுந்த ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஒன்று கூடியிருந்தனர்.

உறவுகளைப் புதுப்பிப்பதாகவும் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதாகவும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதாகவும் ஒன்றுகூடி உண்டு மகிழ்வதாகவும் ஒன்றுகூடல் விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக மைதானம் நிறைந்து காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து பங்குபற்றியவர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியவர்கள் உண்டு மகிழ்வதற்கும் அறுசுவை உணவு வழங்கினார்கள்.

சங்கத்தின் தலைவர் திரு. சி.இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்லூரியின் பழைய மாணவிகள் திருமதிகள் கலா செல்வம் கவிதா காந்தன் ஆகியோர் கல்லூரிக்கீதம் பாடினர். சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. பிரபு பொன்னம்பலம் சங்கக்கொடியை ஏற்றினார். அடுத்து எமது தாயக மீட்புக்காக தம்முயிரை ஈகம்செய்த வீர மறவர்களுக்கும் மக்களுக்குமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்ட பின் விளையாட்டு நிகழ்ச்சிகளை திருமதி ஞானவல்லி தனபாலசுந்தரன் நெறிப்படுத்தினார்.

பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் கலாநிதி பொன் விமலேந்திரன் அவர்களும் கௌரவ விருந்தினராக கல்லூரியின் புகழ்பூத்த கல்விமான்களில் ஒருவரான கலாநிதி சிவா கோபால் அவர்கள் அமெரிக்காவிலிருந்தும் வருகைதந்து கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் சங்கத்தின் செயற்பாடுகளையும் ஒன்றுகூடல் நடைபெற்ற இடத்திற்கு கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்கள் அமரர்கள் இ.கே.நாகராஜா மற்றும் எஸ்.வரதலிங்கம் ஞாபகார்த்த விளையாட்டுத்திடல் என்று பெயரிட்டதனையும் நன்கு பாராட்டினார்கள். நிறைவாக சங்கத்தின் செயலாளர் திரு. ச.சிறிதரன் நன்றியுரையாற்றினார்.

அன்றைய பொழுதை ஓர் இனிய பொழுதாகவும் தம்மை உயர்ந்த நிலைக்கு ஆளாக்கிய கல்லூரி அன்னைக்கு நன்றி கூறும் விழாவாகவும் ஒழுங்குசெய்த சங்கத்தின செயற்குழு உறுப்பினர்களை ஒன்றுகூடலுக்கு வருகை தந்திருந்த அனைவரும் பாராட்டிச் சென்றனர்.